| MCOP. No. 344/2023 | Name : - பெரியசாமி | P W- 1 | Date: 23.10.2025. |
|---|---|---|---|

**( சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையை தொடர அனுமதி வழங்கப்படுகிறது. )**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :- ( 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

1-ம் எதிர்மனுதாரர் கூடுதல் ஓட்டுநருக்கு உண்டான காப்பீட்டு தொகையை செலுத்தாததால் 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வலதுகாலில் பொருத்தப்பட்ட பிளேட் தற்பொழுது நீக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு நான் தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான மருத்துவ ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்பதாலும் நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்பதாலும் நான் தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் பரிகாரம் கோராமல் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வருமானத்தை நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமம் 2029- ஆம் ஆண்டு வரை செல்லத்தக்கதாக உள்ளது. மேற்படி விபத்திற்கு பின்னிட்டு எனது ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்கும் பொழுது எனது மருத்துவ ரீதியிலான உடற்தகுதி சான்றிதழை தாக்கல் செய்தேன். எனக்கு எவ்வித நிரந்தர ஊனம் இல்லை என்றும் அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தயார் செய்யப்பட்டவை என்றும் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை:-**

**ஒப்பம் /- கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**